## **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**

**(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./மி.ப.வி/8–16, 29–11–2012 நாளிட்டது)**

2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 46 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181 ஆம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், தமிழ்நாடு மின்பகிர்மான விதித்தொகுப்பிற்குரிய பின்வரும் திருத்ததைச் செய்கிறது, அதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 181 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் வேண்டுறுத்தப்பட்டவாறு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

### **திருத்தம்**

மேற்சொன்ன விதித்தொகுப்பில், 26ஆம் ஒழுங்குமுறை விதியில், (2) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதியில் பின்வரும் விளக்கம் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

‘‘**விளக்கம்:–** இந்த உள்–ஒழுங்குமுறைவிதியின்படி, ‘‘இருந்து வரும் மின்னிணைப்பு’’ என்பது, (2) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதி நடைமுறைக்கு வந்த தேதியான 21–03–2012 அன்றோ அல்லது அதற்கு முன்போ கொடுக்கப்பட்ட மின்னிணைப்பு அல்லது மின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட கூடுதல் தேவை என்று பொருள்படும்’’.

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**(சி. குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்